# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

முறையீட்டு மனு எண்: 52/மா/2017

ஆணை எண்: 242/2017

நாள்: 03/10/2017

| | | |
|---|---|---|
| 15.03.2017 நாளிட்ட தினகரன் நாளிதழ் செய்தி | – | இம்முறைமன்ற நடுவத்தால் தாமாகவே முறையீடாக பதிவு செய்யப்பட்டது |
| மண்டல அலுவலர், மண்டலம் 15, சோழிங்கநல்லூர், சென்னை மாநகராட்சி. | – | எதிர் மனுதாரர் |

## ஆணை

15/03/2017 நாளைய தினகரன் நாளிதழில் "இரவோடு இரவாக தகன மேடையை இடித்து அகற்றி மாநகராட்சி சுடுகாட்டை ஆக்கிரமிக்க முயற்சி" எனும் குறுந்தலைப்பில் சென்னை மாநகராட்சி சோழிங்கநல்லூர் மண்டலம் குறித்து வரப்பெற்ற செய்தியினை 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7–ன்படி இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முறையீடாகப் பதிவு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.

2) இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.52/2017/மா நாள்: 23.03.2017–ல் மேற்படி பத்திரிக்கைச் செய்தியில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பான உண்மை நிலை மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த பதில் உரையை தொடர்புடைய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க சோழிங்கநல்லூர் மண்டலம்–15ன் மண்டல அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

3) சென்னை பெருநகர மாநகராட்சி, 15வது மண்டலம், 193வது வார்டு பகுதியில் நாளிதழ் செய்தியில் பிரசுரமான, மயானமாகப் பயன்படுத்தப்பட்ட இடம் வருவாய்த் துறை ஆவணங்களின்படி துரைப்பாக்கம் கிராமத்திலுள்ள புல எண்.406/80 ஆகும் என்றும், புல எண்.406/80ன் மொத்தப் பரப்பளவு 3.64.00 ஹெக்டர் என்றும் இந்நிலம் தனி நபருக்குச் சொந்தமான பட்டா நிலம் என்றும் சோழிங்கநல்லூர் மண்டல அலுவலர் தமது 18.9.2017 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், சென்னை மாநகராட்சி விரிவாக்கத்திற்கு முன்பு துரைப்பாக்கம் ஊராட்சியாக இருந்த காலத்திலிருந்தே நாளிதழில் குறிப்பிடப்பட்ட இடம் அப்பகுதி மக்களால் மயானமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பின்னர் மண்டலம் 15ல் உள்ள 27 மயான பூமிகளில் இதுவும் ஒன்றாகும் என்றும் இந்த இடம் தனியாருக்குச் சொந்தமான இடம் என்று பட்டியலிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். இம்மயான பூமியில் மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு என்ற எண்ணிக்கையில் இறந்தவர்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவதாகவும், இடத்தின் உரிமையாளர் தகன மேடையை அகற்றிவிட்டு, மேம்பாட்டு பணிக்காக சமப்படுத்தி வருவதாகவும், அப்பகுதி மக்கள் பயன்பாட்டிற்காக அந்த இடத்திலிருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் வருவாய்த் துறையினரால் வரையறுக்கப்பட்டு அமைந்துள்ள மயான பூமியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் ராஜீவ் காந்தி சாலையில் கோட்டம் 197, காரப்பாக்கம் மயானத்தில் ஒரு எரிவாயு தகனமேடை அமைக்க நடப்பு நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் 15வது மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார்.

4) எனவே, நாளிதழில் குறிப்பிடப்பட்ட தகனமேடை தனியாருக்குச் சொந்தமான பட்டா இடம் என்றும், சுமார் 500 மீட்டர் தூரத்தில் அரசு ஆவணங்களின்படி ஒரு மயானமும் உள்ளது என்றும், சென்னை மாநகராட்சியால் காரப்பாக்கம் பகுதியில் நடப்பு நிதியாண்டில் ஒரு எரிவாயு தகனமேடை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருவதாலும் அதன் அடிப்படையில் இந்நேர்வில் நடவடிக்கைகளை நிறைவு செய்து ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 4-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

சென்னை–600 032

பெறுநர்

மண்டல அலுவலர், மண்டலம் 15,
சென்னை மாநகராட்சி, (சோழிங்கநல்லூர்),
எண்.120, ராஜீவ் காந்தி சாலை, சோழிங்கநல்லூர், சென்னை – 600 119.

5/10/17

<u>நகல்</u>

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு – 3,
இ.கோ. / உதிரி –2